## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கா போட்ஸ் மனேஜ்மென்ட் அன்ட் கென்சல்ரன்ஸி (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தின் | பெறுமானத்தேய்வு என்பது கணக்கீட்டு மதிப்பீடொன்றாகும். இச் சொத்துக்கள் ஏற்கனவே முன்னைய நிதியாண்டுகளில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ளன. இப் | நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கும் போது நியமத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க |

| | | |
|---|---|---|
| பயன்தரு ஆயுட்காலம் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டு 10.15-10.18 ஆம் பந்திகளிற்கு இணங்க எதிர்பார்க்கையில் ஏற்படும் மாற்றம் கணக்கீட்டு மதிப்பீட்டில் உள்ள மாற்றமொன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். அதற்கு முரணாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் கம்பனியால் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 4,691,550 கிரயத்திலான சொத்துக்களிற்கு நியமத் தேவைப்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமானத்தேய்வு விகிதங்கள் அனைத்தும் தொழில் நடைமுறைகளுக்கு இணையாகக் கருதப்படுகின்றன.<br><br>எனினும், கம்பனி 2021 FS இல் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களுக்கு தனியான வெளிப்படுத்தல் குறிப்பொன்றை வழங்கும். மேலும், தங்கள் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு தேவையான சீராக்கங்கள் 2021 இல் மேற்கொள்ளப்படும். | முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**1.5.2 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,433,589 தொகையான உபகரணங்கள் மற்றும் ஏனையவற்றிற்கான விபரமான பட்டியல் மற்றும் ரூபா 15,421,908 தொகையான ஏனைய பெறவேண்டியவைக்கான உறுதிப்படுத்தல் என்பன கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | இவை 2009 ஆம் ஆண்டிற்கு முன்னரே முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட மீதிகளாகும். இவை கணக்கீட்டு முறைமையில் முன்கொண்டுவரப்பட்ட மீதிகளாக உள்ளதுடன் தற்போது இது தொடர்பான மூல ஆவணங்களை கம்பனி கொண்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முகாமைத்துவம் அனைத்து தகவல்களையும் சமர்ப்பிக்க வேண்டும். |

**1.5.3 தொடர்புபட்ட தரப்பினரிடமிருந்து பெறவேண்டியவை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்தான (தொடர்புபட்ட தரப்பினர்) ரூபா 165,254,816 வியாபார பெறவேண்டியவையை கம்பனி காட்டியிருந்த போதிலும் துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனிக்கு செலுத்த வேண்டிய வியாபாரமாக ரூபா 13,496,949 மாத்திரமே காட்டப்பட்டிருந்தது, ஆகையால் ரூபா 151,757,868 ஆன குறிப்பிடத்தக்களவு வேறுபாடு காணப்பட்டது. 2021 | SLPMCS ஆனது சேவையைப் பெற்ற SLPA இன் குறிப்பிட்ட பிரிவுக்கு தொடர்ந்துவரும் மாதத்தில் சேவைகளுக்கான விலைப்பட்டியல்களை SLPA இற்கு சமர்ப்பிக்கின்றது. எமது புரிந்துகொள்ளலின் பிரகாரம் அந்த ஆவணங்களை உரிய பிரிவிலிருந்து நிதிப் பிரிவுக்கு அனுப்புவதற்கு சிறிது நேரம் எடுக்கும், இது இந்த சிக்கலை விளைவித்திருக்கலாம். மேலும் நாங்கள் இது தொடர்பாக SLPA இற்கு எழுத்துமூலமும் | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் எந்த முரண்பாடுகளையும் தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் காலரீதியாக தொடர்புபட்ட தரப்பினருடன் மீதியை கணக்கிணக்கம் செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| யூன் 30 இல் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டியவை ரூபா 214,992,582 வரை அதிகரித்திருந்தது. | தெரிவித்துள்ளோம். எனினும் SLPA இன் மீதிகள் எமது அதிகார எல்லைக்கு உட்பட்டவை அல்ல. அத்துடன் நாங்கள் எமது மீதிகளிற்கு மாத்திரமே உறுதியளிக்கிறோம். |

**1.6 தொடர்புபட்ட தரப்பினர்கள் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை தீர்மானத்தின் பிரகாரம் சபையின் அங்கீகாரத்தை பெற்ற பின்னரே தண்டப்பணம் விதிக்கப்படும். அதற்கு முரணாக கம்பனி சபையின் அங்கீகாரமின்றி இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு குத்தகை வாடகை கொடுப்பனவு தாமதங்களிற்காக ரூபா 232,196 தண்டப்பணத்தை செலுத்தியிருந்தது. | இணங்கப்பட்டுள்ளது. சபையிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். | அத்தகைய கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்யும் போது முகாமைத்துவம் சபைப் பணிப்புரைகளை பின்பற்ற வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| **2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கை** | | | | |
| (i) | 7.4.5 ஆம் பிரிவு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிலையான சொத்துக்களை சரிபார்ப்பதற்கு கம்பனி வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வானது பொருள் மெய்மையாய்வு சபை ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்படும். | முகாமைத்துவம் சொத்துக்களின் பௌதீக ரீதியான இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அதன் சொத்துக்களை வருடாந்தம் மெய்மையாய்வு செய்ய வேண்டும். |
| (ii) | 9.2 ஆம் பிரிவு | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | இணங்கப்பட்டுள்ளது. எனினும் கம்பனியானது சபையால் | பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்கத்தில் அமைப்பு கட்டமைப்பு |

| | | |
|---|---|---|
| என்பன திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு கட்டமைப்பு மற்றும் பதவியணியை கொண்டுள்ளது. | மற்றும் பதவியணியை பதிவு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,989,455 நட்டமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 3,630,126 ஆகும். ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 640,671 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் கம்பனி இரண்டு வணிகங்களைத் தொடங்கியமை, அவை ஜெயா கென்ரெய்னர் ரேர்மினலில் (Jaya Container Terminal) மேலதிக மனித சக்தியை பூர்த்தி செய்வதுடன் சேர்த்து கிழக்கு கொள்கலன் முனையத்தின் (East Container Terminal) செயற்பாடுகளுக்காக ஒப்பந்த முனைய செயற்பாட்டாளர்களை (contract terminal operators) வழங்குகின்றமை என்பன இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும். மேலும் கம்பனி 2020 திசெம்பரில் கிழக்கு கொள்கலன் முனையத்தில் Inter Terminal Trucking சேவைகளை வழங்கத் தொடங்கியிருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| விபரம் | 2020 | 2019 | அதிகரிப்பு/ (குறைவு) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| **வருமானம்** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| சேவைக் கட்டணத்திலிருந்தான வருமானம் | 17,671,312 | 15,455,050 | 2,216,262 | 14.34 |
| காலிமுகத் திடல் பசுமையிலிருந்தான (Galle Face Green) வருமானம் | 8,783,083 | 15,653,237 | (6,870,154) | (43.89) |
| பணிக்கமர்த்தல் சேவையிலிருந்தான (Creche) வருமானம் | 2,323,548 | 0 | 2,323,548 | 100.00 |
| ஏனைய வருமானம் | 2,924,676 | 3,683,030 | (758,354) | (20.59) |
| தேறிய நிதி வருமானம் | 12,926,711 | 17,419,275 | (4,492,564) | (25.79) |
| **நிர்வாக மற்றும் தாபன செலவினம்** | | | | |
| வருடாந்த மிகையூதியம் | 1,076,550 | 729,309 | 347,241 | 47.61 |
| மருத்துவ காப்புறுதி | 1,956,280 | 1,172,477 | 783,803 | 66.85 |
| பணிக்கொடை செலவினங்கள் | 1,334,302 | 699,345 | 634,957 | 90.79 |

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

2.2.1. மீளாய்வாண்டிற்கான கம்பனியின் சேவைக் கட்டணத்திலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2,216,262 அல்லது 14.34 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேநேரம், காலி முகத்திடல் பசுமையிலிருந்து கிடைக்கும் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா 6,870,154 அல்லது 44 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. பணிக்கமர்த்தல் சேவைகளிலிருந்தான வருமானமாக புதிய வருமான மூலம் வருமானத்திற்கு சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து ரூபா 2,323,548 தொகை ஈட்டப்பட்டிருந்தது. கிழக்கு கொள்கலன் முனையத்தை செயற்படுத்துவதற்காக இப் பணிக்கமர்த்தல் சேவைகள் துறைமுக அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் மற்றும் நிதி வருமானம் என்பன முறையே 21 மற்றும் 26 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

2.2.2 ஈட்டிய இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக வருடாந்த மிகையூதியம் 2020 ஆம் ஆண்டில் 48 சதவீதத்தால் அல்லது ரூபா 347,241 ஆல் அதிகரித்திருந்ததுடன் மிகையூதிய விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2.2.3 முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் மருத்துவக் காப்புறுதி செலவினங்கள் 67 சதவீதம் அல்லது ரூபா 783,803 ஆல் அதிகரித்திருந்தது. 2019 மார்ச் வரை காப்புறுதித் தவணைப்பணத்தில் 25% ஊழியர்களால் செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் முதல் முழுக் காப்புறுதி கிரயத்தையும் கம்பனி தாங்கிக்கொள்வதற்கு தீர்மானித்திருந்தது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விகிதப் பகுப்பாய்வு** | **2020** | **2019** |
|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | |
| மொத்தலாப விகிதம் | 26.42 | 29.37 |
| தேறியலாப விகிதம் | (3.73) | (4.43) |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் % | 5.60 | 8.00 |
| **செயற்பாட்டு விகிதம்** | | |
| வியாபார பெறவேண்டிய நாட்கள் | 809.79 | 391.55 |
| வியாபார செலுத்த வேண்டிய நாட்கள் | 915.69 | 455.22 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | |
| நடைமுறை விகிதம் | 1.25:1 | 1.66:1 |
| விரைவு விகிதம் | 1.24:1 | 1.66:1 |

2.3.1(அ) கொவிட் தொற்றுநோய் பரவல் காரணமாக துப்புரவாக்கல் பொருட்கள் தொடர்பான நேரடிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் மொத்தலாப விகிதம் குறைவடைந்திருந்தது.

(ஆ) ஆண்டின் போது வரிச் சேமிப்பு காரணமாக தேறியலாப விகிதம் 8.56% இலிருந்து 9.19% வரை அதிகரித்திருந்ததுடன் நிதி வருமானம் குறைவடைந்தமை மற்றும் நேரடிக் கிரயம் அதிகரித்தமை என்பவற்றின் காரணமாக ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் 8 சதவீதத்திலிருந்து 5.6 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கடன் சேகரிப்பு காலம் 391 நாட்களில் இருந்து 809 நாட்கள் வரை 418 நாட்களால் நீடிக்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து பெறவேண்டியவைகளை சேகரிப்பதற்கு கம்பனி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) நடைமுறை மற்றும் விரைவு விகிதங்கள் இரண்டும் 1.24 வரை 0.42 ஆல் குறைவடைந்திருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான Mc Cullum Lock gate வளாகமானது 2018 பெப்ரவரி 01 தொடக்கம் ஐந்து வருடங்களுக்காக குத்தகை உடன்படிக்கையொன்றை 2018 ஏப்ரல் 10 இல் கம்பனி கைசாத்திட்டதன் மூலம் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகைதாரர் உடன்படிக்கையை நிறைவேற்றும் போது ஆறு மாத குத்தகை வாடகையின் மதிப்பீட்டுக் கட்டணம் மற்றும் வைப்பை ரூபா 3,150,000 இற்கு சமமான மீளளிக்கக்கூடிய வைப்பாகச் செலுத்த வேண்டிய போதிலும் குத்தகைதாரர் ரூபா 1,811,250 தொகையை மாத்திரமே மீளளிக்கக்கூடிய வைப்பாக வைப்புச் செய்திருந்ததுடன் குத்தகைதாரர் ஆண்டின் போது உடன்படிக்கையை முடிவுறுத்தியிருந்த அதேநேரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,279,263 தொகை நிலுவையாக காணப்பட்டது. | கம்பனி மீளளிக்கக்கூடிய வைப்பு மீதியைப் பெற்றுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தொற்றுநோய்களின் பின்விளைவுகள் என இரண்டு பெரிய கறுப்பு ஸ்வான்ஸால் (major black swans) இத் தன்மையிலான வணிகங்கள் மிகவும் பாதிக்கப்பட்டதால் கம்பனி பொறுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், பெறவேண்டியவைகளை இயன்றளவு விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். | கம்பனிக்கு ஏதேனும் அறவிடமுடியாக் கடன் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக மீளளிக்கக்கூடிய வைப்பு மற்றும் ஏனைய இணங்கப்பட்ட கொடுப்பனவை உரிய நேரத்தில் சேகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | காலி முகத்திடல் பசுமையின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கம்பனியால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை 2019 பெப்ரவரி 09 இல் காலாவதியாகியிருந்ததுடன் இது 2021 மே 31 வரை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையை கையொப்பமிடும் செயன்முறையை விரைவுபடுத்துமாறு SLPMCS பலமுறை SLPAயிடம் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், 2020.06.17 ஆம் திகதிய உபதலைவரின் (SLPA) கடிதத்தின் மூலம் வளாகத்தை நிர்வகிப்பதற்கான உரிய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஏதேனும் சட்டச் சிக்கல்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு உடன்படிக்கை முறையாக கைச்சாத்திடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2017 மார்ச் 28 இல் எழுத்துமூலமான உடன்படிக்கையின்றி காலி முகத்திடல் பசுமையில் உணவுக் கடைகளை அமைப்பதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு காணித் துண்டொன்று குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அக் கம்பனியிடமிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள ரூபா 1,635,000 வாடகை காணப்பட்டதுடன் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட மீளளிக்கத்தக்க வைப்பு ரூபா 900,000 ஆகும். | இந்த இடம் டைன்மோ (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கை ஏற்கனவே முடிவுறுத்தப்பட்டதுடன் பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை கம்பனி எடுக்கும். | பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காலி முகத்திடலில் விற்பனை செய்பவர்களிடமிருந்து வருமானத்தை சேகரிப்பதற்காக கம்பனி முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை கொண்டிருக்காததுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்காக சேகரிக்கப்படாத நிலுவை மீதிகள் முறையே ரூபா 5,898,125 மற்றும் ரூபா 5,301,077 ஆக காணப்பட்டன. | இந்த விற்பனையாளர்கள் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அவர்கள் பரம்பரை அடிப்படையில் தொழில் செய்து வருகின்றனர். எனினும், இக் காலப்பகுதியின் போது இலங்கை கடற்படை மற்றும் SLPA மூலம் வளாகங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டில் சரியான திட்டத்தின் பிரகாரம் விற்பனையாளர்களை முறைமைப்படுத்துவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | காலிமுகத் திடலின் விற்பனையாளர்களிடமிருந்து வருமானத்தை சேகரிப்பதற்கு முகாமைத்துவம் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும். |
| காலிமுகத் திடல் பசுமையில் உள்ள நிலத்தடி உணவகம் 2017 யூன் 01 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு உடன்படிக்கை ஒன்றின் மூலம் 2017 மே 19 இல் தனியார் தரப்பினரொருவரிற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் பின்னர் இணங்கப்பட்ட நிபந்தனைகள் 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாற்றப்பட்டது. இணங்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா | கம்பனி மீளளிக்கக்கூடிய வைப்பு மீதியைப் பெற்றுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தொற்றுநோய்களின் பின்விளைவுகள் என இரண்டு பெரிய கறுப்பு ஸ்வான்ஸால் (major black swans) இத் தன்மையிலான வணிகங்கள் மிகவும் பாதிக்கப்பட்டதால் கம்பனி பொறுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், | உரிய தரப்பினர்களிடம் இருந்து உரிய காலத்தில் பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 1,500,000 இற்கு சமமான முன்று மாத குத்தகை வாடகை கம்பனிக்கு மீளளிக்கக்கூடிய வைப்பாக வைக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி 2020 திசெம்பர் 31 வரையிலும் அத்தகைய வைப்பை பெற்றிருக்கவில்லை. | பெறவேண்டியவைகளை இயன்றளவு விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி ஆட்சேர்ப்பு திட்டம் ஒன்றை தயாரித்திருக்காததுடன் வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பன பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. இயன்றளவு விரைவாக எஸ்ஓஆர் தயாரிக்கப்படும். | ஆட்சேர்ப்பு திட்டம் தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சின் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பன பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நீண்டகால இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற கூட்டிணைந்த திட்டம் இன்னும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது, 2022-25 இற்காக இயன்றளவு விரைவாக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படும். | எதிர்கால இலக்குகளைக் காட்டுகின்ற கூட்டிணைந்த திட்டத்தை முகாமைத்துவம் தயாரிக்க வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வும் கணக்காய்வுக் குழுவும்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றைக் கொண்டிருக்காததுடன் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. கம்பனி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். | முகாமைத்துவம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை உருவாக்க வேண்டும் அல்லது சபையால் முன்வைக்கப்படும் கட்டுப்பாடுகளை மீறுவதைத் தவிர்ப்பதற்காக உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு விசேட உத்தியோகத்தரை நியமனம் செய்ய வேண்டும். மேலும் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை மற்றும் சுற்றறிக்கைகளை பின்பற்றுவதற்கு கணக்காய்வுக் குழுவை உருவாக்க வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும், அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கான அளவுகோல்களையும் இனங்காண வேண்டிய போதிலும் கம்பனி அந்த இலக்குகள் மற்றும் மைல்கற்களை இனங்கண்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கம்பனி தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் அளவுகோல்களையும் இனங்கண்டு அதனை அமுல்ப்படுத்த வேண்டும். |